செய்தி வெளியீடு எண்:438 நாள்:13.07.2021

<u>செய்தி வெளியீடு</u>

**எண்ணூர் சிறப்பு பெருளாதார மண்டல மின் திட்டம் மற்றும் வடசென்னை அனல் மின் திட்டம் நிலை -III ஆகிய திட்டங்கள் அமைக்கப்பட்டு வரும் பகுதிகளில் அனைத்து துறைகளின் அனுமதி பெற்ற பின்னரே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. V.செந்தில்பாலாஜி அவர்கள் அறிக்கை**

எண்ணூர் சிறப்பு பெருளாதார மண்டல மின் திட்டம் மற்றும் வடசென்னை அனல் மின் திட்டம் நிலை -III அமைக்கப்பட்டு வரும் பகுதிகளில் அனைத்து துறைகளின் அனுமதி பெற்ற பின்னரே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை அமைச்சர் திரு. V. செந்தில்பாலாஜி அவர்கள் அறிக்கை.

எண்ணூர் சிறப்பு பெருளாதார மண்டல மின் திட்டத்தின் கீழ் (2X660 MW) அனல் மின் உற்பத்தி மையம், ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அனுமதி எண்.(J-13102/36/2010-IA.II(T) படி அனுமதிக்கப்பட்டு 2023-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறையின் அரசணை நிலை எண். 265-ன் படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டம் செயல்படுத்துவதற்கு தேவையான முன்அனுமதிகள், தடையில்லா சான்றுகள் உள்ளிட்ட அனைத்து நடைமுறைகளும் பின்பற்றி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு தேவையான நிலக்கரி மற்றும் கடல்நீர் கொண்டு செல்வதற்கு தேவையான அனைத்து கட்டமைப்புகளும் (குழாய்கள், தாங்கு பாலங்கள், வழிதடங்கள்) பக்கிங்காம் கால்வாய், கொசஸ்தலை ஆறு, காமராஜர் துறைமுகம் மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கழகம் (TIDCO)

ஆகியவற்றிற்கு சொந்தமான நிலங்கள் வழியாக வடசென்னை அனல் மின் நிலையம் அலகு II-லிருந்து கொண்டு செல்லப்படுகிறது.

இத்திட்டத்திற்கு தேவையான அனைத்து அனுமதிகளும், ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் மூலம் வழங்கப்பட்டு, தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறையின் தொடர் கண்காணிப்பின் கீழ் அனைத்து கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சட்டபூர்வமான நிறுவனங்கள் வரையறுத்துள்ள அளவுகளின் படி உரிய இடைவெளி மற்றும் குறைந்தபட்ச உயரம் உள்ளிட்ட அளவுகள் பின்பற்றப்பட்டு வருகிறது.

நீர்நிலைகளில் பணிமேற்கொள்ள தேவையான கட்டமைப்புகளை உருவாக்க அனுமதிக்கப்பட்டுள்ள கட்டுமான பொருள்களை கொண்டு தற்காலிக சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அனல் மின் திட்டப் பணிகள் நிறைவுற்ற பின்னர் தற்காலிக சாலை அனைத்தும் முற்றிலுமாக நீக்கப்படும். தற்போது மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் விதிகளுக்குட்பட்டு நடைபெற்று வருகிறது.

மேலும், வடசென்னை அனல் மின் திட்டம் நிலை III- அனுமதி எண். (J-13102/14/2012-IA.II(T) மற்றும் ஒன்றிய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட அரசிதழின் படி ஜனவரி 2023 வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை அனுமதி கடித எண். DB/T5(3)/NCTPP Stage III-ன் படி இத்திட்டம் செய்லபடுத்துவதற்கான தடையில்லா சான்றிதழ் மற்றும் அனுமதி கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இம்மின் நிலையத்தில் உற்பத்தி தொடங்கிய பின்னர், வெளியேற்றக்கூடிய சாம்பல் கழிவுகளை கொண்டு செல்ல ஏதுவாக ஒன்றிய சுற்றுச்சூழல் துறை, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை மற்றும் சுற்றுச்சூழல் துறை ஆகியவற்றின் அனுமதியோடு குழாய்கள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையத்திலிருந்து வெளியேற கூடிய

அனைத்து சாம்பல் கழிவுகளும் வாகனங்கள் மூலம் உடனடியாக அப்புறப்படுத்தப்படும். இந்நிலையில் அவசர காலங்களின்போது இந்நிலையத்திலிருந்து சாம்பல் கழிவுகளை கரைத்து, பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் மூலமாக சாம்பல் குளத்திற்கு அனுப்பப்படும்.

மேற்கூறிய இரண்டு மின் திட்டப்பணிகளும் ஒன்றிய மற்றும் மாநில அரசுத் துறைகள் விதித்துள்ள விதிகளின் படியும், தொடர் கண்காணிப்பின் கீழும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை - 9.